தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, தை 7, திருவள்ளுவர் ஆண்டு–2047

2016 ஜனவரி 21, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை."

ஒருபொழுதும் சோர்வு இல்லாத ஊக்கம் உடையவரிடத்தில், வெற்றியானது தானே அவர் இருக்கும் இடம் தேடி வழி கேட்டு வந்து சேரும்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. ரா. ரெத்தின தேவர் அவர்கள் 28–9–2015 அன்றும், திரு. கு. திருப்பதி அவர்கள் 1–10–2015 அன்றும், திரு. பொ.நா. சுப்பிரமணி அவர்கள் 1–10–2015 அன்றும், திரு. ஜி. இராமசாமி அவர்கள் 6–11–2015 அன்றும், திரு. செங்கை சிவம் அவர்கள் 11–11–2015 அன்றும், திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் 24–11–2015 அன்றும், திரு. பு.செ. முத்துச்செல்வன் அவர்கள் 25–11–2015 அன்றும், திரு. ஆர். சொக்கர் அவர்கள் 10–12–2015 அன்றும், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் 21–12–2015 அன்றும், திரு. கே.என். சண்முகம் அவர்கள் 29–12–2015 அன்றும் மற்றும் திரு. பம்மல் நல்லதம்பி அவர்கள் 5–1–2016 அன்றும், மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[பேரவைத் தலைவர்] [2016 ஜனவரி 21

திரு. ரா. ரெத்தின தேவர் அவர்கள் 1967 முதல் 1971 வரை முதுகுளத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கு. திருப்பதி அவர்கள் 1971 முதல் 1976 வரை மதுரை மத்திய தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. பொ.நா. சுப்பிரமணி அவர்கள் 1996 முதல் 2001 வரை ஆற்காடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. ஜி. இராமசாமி அவர்கள் 1971 முதல் 1976 வரை திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. செங்கை சிவம் அவர்கள் 1989 முதல் 1991 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் இரண்டு முறை பெரம்பூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் 1957 முதல் 1962 வரையிலும், 1980 முதல் 1984 வரையிலும், 1989 முதல் 1991 வரையிலும், 1991 முதல் 1996 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் ஐந்து முறை நிலக்கோட்டை தொகுதியிலிருந்தும், 1962 முதல் 1967 வரை சோழவந்தான் தொகுதியிலிருந்தும் மற்றும் 1985 முதல் 1988 வரை பழனி தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. பு.செ. முத்துச்செல்வன் அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் இரண்டு முறை முசிறி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ஆர். சொக்கர் அவர்கள் 1989 முதல் 1991 வரை விருதுநகர் தொகுதியிலிருந்தும், 1996 முதல் 2001 வரை சிவகாசி தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் 1991 முதல் 1996 வரை தாராபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1993 முதல் 1996 வரை அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

திரு. கே.என். சண்முகம் அவர்கள் 1977 முதல் 1980 வரை லால்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

முற்பகல் 10–05

திரு. பம்மல் நல்லதம்பி அவர்கள் 1980 முதல் 1984 வரை தாம்பரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) பெருமழை மற்றும் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட உயிரிழப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள் 2015 ஆம் ஆண்டு பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் உயிரிழந்தவர்கள் குறித்த தீர்மானம்.

"தமிழ்நாட்டில் கடந்த டிசம்பர் மாதம் எப்போதும் இல்லாத வகையில், வடகிழக்குப் பருவமழை, ஒரு சில நாட்களில் மிக அதிகமான அளவு கனமழையாகப் பெய்ததன் காரணமாக, தமிழ்நாட்டின் பல மாவட்டங்கள், அதிலும் குறிப்பாக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன.